# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை–600 032.
தொலைபேசி: 044–22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை –600 032
முன்னிலை: முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ).

********

முறையீட்டு மனு எண்: 725/2016பே
ஆணை நாள். 10 –11–2018

திரு H. ராஜேஷ்,
110/101, அ. எண். 4, 2–வது தளம்,
கோல்டன் டவர், மேல வீதி,
திருக்கோவிலூர்,
விழுப்புரம் மாவட்டம்–605757. —— முறையீட்டு மனுதாரர்.

செயல் அலுவலர்,
திருக்கோவிலூர் பேரூராட்சி,
திருக்கோவிலூர்,
விழுப்புரம் மாவட்டம்–605757. —— எதிர் மனுதாரர்.

ஆணை.

விழுப்புரம் மாவட்டம், திருக்கோவிலூர் பேரூராட்சி, எண். 110/101, 2–ம் தளம், அறை எண் 4, மேல வீதி, திருக்கோவிலூரைச் சேர்ந்த திரு. H. ராஜேஷ், முறையீட்டு மனுதாரர் தனது 19.07.2016 நாளிட்ட முறையீட்டு மனுவினை இம்முறைமன்ற நடுவத்தில் 21.07.2016ல் சமர்ப்பித்துள்ளார்..

இம்முறைமன்ற நடுவ 29.07.2016 நாளிட்ட அறிவிப்பாணையில் மேற்படி முறையீட்டு மனுவினை 2015–ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் (முறையீட்டு மனு தாக்கல் வழிமுறை, விசாரணை மற்றும் இறுதி செய்தல்) விதிகள்,.விதி 6–ல் நிர்ணயிக்கப்பட்டவாறு ரூ.10/–க்கான நீதிமன்ற வில்லைக் கட்டணத்துடனும், விதி 4–ல் நிர்ணயித்துள்ளவாறு, படிவம்.1–ல் பூர்த்தி செய்து சமர்ப்பிக்கவும் தெரிவித்து ஆணையிடப்பட்டது.

இதனைத் தொடர்ந்து முறையீட்டு மனுதாரர் தனது 12.09.2016 நாளிட்ட முறையீட்டு மனுவில் முறையீட்டு மனுவினை உரிய முறையில் இம்முறைமன்ற நடுவத்திற்கு அனுப்பிவைத்துள்ளார். மேற்படி முறையீட்டு மனுவிற்கு முறையீட்டு மனு எண்.725/2016 என எண்ணிடப்பட்டது. முறையீட்டு மனு மீது அறிக்கைகள் பெறப்பட்டு, விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு, பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது

திரு.H. ராஜேஷ், முறையீட்டு மனுதாரர் தனது முறையீட்டு மனுவுடன் இணைத்துள்ள 19.07.2016 நாளிட்ட கோரிக்கை விவர கடிதத்தில், விழுப்புரம் மாவட்டம், திருக்கோவிலூர் பேரூராட்சியில் அமைக்கப்படும் புதிய பேருந்து நிலையம் வரைபட அனுமதி பெறப்பட்டு கட்டப்படவில்லை எனவும், மேற்படி பேருந்து நிலைய கட்டிட வரைபடத்தில் உள்ளவாறு கடைகள் கட்டப்படாமலும், பெறப்பட்ட அனுமதிக்கு மாறாக கடைகள் கட்டப்பட்டுள்ளதாகவும், மேலும் முதல் தளம் அமைக்கப்படாமல் கட்டிடப் பணி முடிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது., போதிய இட வசதி, பொதுமக்கள், பயணிகளின் நலனை கருத்தில் கொள்ளாமல் வெறும் பேரூராட்சியின் வருவாயை கணக்கில் கொண்டும் பெறப்பட்ட அனுமதியினையும் மீறி அதிக கடைகள் கட்டப்பட்டும், இதில் கட்டுமான பணிகளுக்கான அனுமதி பெறப்படும் முன்னரே பணிகள் துவங்கப்பட்டு தொகைகள் செலவினமாக மேற்கொள்ளப்பட்டுள்ளன எனவும் மேற்படி புகார்களை தெரிவித்துள்ளார்.

இம்முறைமன்ற நடுவ 28.09.2016 நாளிட்ட அறிவிப்பாணை மூலம் மேற்படி முறையீட்டு மனுவிற்கான விளக்க அறிக்கையினை சமர்ப்பிக்கக் கோரி திருக்கோவிலூர் பேரூராட்சி செயல் அலுவலருக்கு ஆணையிடப்பட்டது.

திருக்கோவிலூர் பேரூராட்சி செயல் அலுவலர் தனது கடித ந.க.எண்.அ.1/650/2016/ நாள்.14.10.2016ன் மூலம் தனது விளக்க அறிக்கையினை இம்முறைமன்ற நடுவத்தில் கீழ்க்கண்டவாறு சமர்ப்பித்துள்ளார்.

கடலூர் மண்டலம், விழுப்புரம் மாவட்டம், திருக்கோவிலூர் பேரூராட்சிக்கு புதிய பேருந்து நிலைய அபிவிருத்தி பணி மேற்கொள்ள, 20.09.2013 அன்று பேரூராட்சி மன்றக் கூட்டம் நடைபெற்று அபிவிருத்தி பணிகள் மேற்கொள்ளப்பட்டதாகவும், இதனிடையில் 16.07.2015 அன்று அப்போதைய அமைச்சர் தலைமையிலும், மாவட்ட ஆட்சியர் முன்னிலையிலும் பூமி பூஜை நடத்தப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. திருக்கோவிலூர் பேரூராட்சி பகுதியில் நீண்ட காலமாகவே பேருந்து நிலையம் அமைக்கப்படாமல் இருந்ததால் பொதுமக்களின் அத்தியாவசிய தேவைகளை கருத்தில்கொண்டு பேருந்து நிலையம் அமைக்க இருக்கும் இடத்திற்கேற்றவாறு விதிமுறைகளுக்குட்பட்டு வரைபடம் தயாரிக்கப்பட்டு நகர் ஊரமைப்பு உதவி இயக்குநரின் அனுமதி பெறப்பட்டதாகவும், தற்போது மனுதாரர் தெரிவித்துள்ளவாறு கடைகள் தரைதளத்தில் மட்டுமே அமைக்கப்பட்டுள்ளதாகவும், முதல் தளம் கடைகள் அமைய வரைபடத்தில் இடம் பெற்று இருந்தாலும், அரசு நிதி ஒதுக்கீட்டின்படி தற்போது பேருந்து நிலையம் அமைக்கப்பட்டுள்ளதாகவும், வரைபடத்தில் உள்ளவாறே கட்டுமானப் பணிகள் நடைபெற்றுள்ளதாகவும், மேற்படி பேருந்து நிலைய கட்டுமானப் பணியில் எந்தவிதமான முரண்பாடுகளும் ஏற்படவில்லை எனவும் திருக்கோவிலூர் பேரூராட்சி செயல் அலுவலர் தனது விளக்க அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

இம்முறைமன்ற நடுவ 10.11.2016 நாளிட்ட அழைப்பாணையின்படி முறையீட்டு மனுதாரரை தனது முறையீடு குறித்து விளக்கம் அளிக்க இம்முறைமன்ற நடுவத்தில் 25.11.2016 அன்று ஆஜராக தெரிவித்து ஆணையிடப்பட்டது. ஆனால் முறையீட்டு மனுதாரர் மேற்படி விசாரணைக்கு ஆஜராகவில்லை.

இம்முறைமன்ற நடுவ 30.11.2016 நாளிட்ட அழைப்பாணை மூலம் மேற்படி பொருள் தொடர்பான தனது விளக்கத்தினை இம்முறைமன்ற நடுவத்தில் பதிவு செய்ய திருக்கோவிலூர் பேரூராட்சி செயல் அலுவலரை இம்முறைமன்ற நடுவத்தில் 21.12.2016 அன்று ஆஜரர்க் தெரிவித்து ஆணையிடப்பட்டது.

21.12.2016 அன்று இம்முறைமன்ற நடுவத்தில் ஆஜரான திருக்கோவிலூா் பேரூராட்சி செயல் அலுவலா் திரு எம்.செல்லப்பிள்ளை, தனது வாக்குமூலத்தினை கீழ்க்கண்டவாறு பதிவு செய்துள்ளாா்.

".......மனுதாரா் மனு விவரம் தனக்கு தெரியும் எனவும் திருக்கோவிலூா் பேருந்து நிலையம் அமைப்பதில் எந்தவித முறைகேடுகளும் இல்லை எனவும் இது குறித்து 14.10.2016ல் பதில் அறிக்கை சமா்ப்பித்துள்ளதாகவும் தனது வாக்குமூலத்தில் தெரிவித்துள்ளதோடு சில கூடுதல் விவரங்கள் தேவைப்படுவதால் முழுவிவரங்களடங்கிய அறிக்கையினை ஒரு வாரத்தில் சமா்ப்பிப்பதாக தனது வாக்குமூலத்தில் தெரிவித்துள்ளாா்.

25.11.2016ல் முறையீட்டு மனுதாரா் தனது விளக்கத்தினை பதிவு செய்ய இம்முறைமன்ற நடுவத்தில் ஆஜராகாததினால், அவருக்கு மீண்டுமொரு வாய்ப்பாக 30.10.2017ல் இம்முறைமன்ற நடுவத்தில் ஆஜராக தெரிவித்து 24.08.2017 நாளிட்ட அழைப்பாணை மூலம் ஆணையிடப்பட்டது. ஆனால் இந்த நாளிலும் முறையீட்டு மனுதாரா் ஆஜராகவில்லை.

15.09.2017 நாளிட்ட திருக்கோவிலூா் பேரூராட்சி செயல் அலுவலரின் அறிக்கையில் மேற்படி பேரூராட்சி பேருந்து நிலையம் மாண்புமிகு தமிழக முதலமைசசா் அவா்களால் காணொளி காட்சி மூலம் 04.03.2017ல் பொதுமக்கள் பயன்பாட்டிற்கு கொண்டுவரப்பட்டுள்ளதாகவும், மேலும் மேற்படி பேருந்து நிலைய கட்டிடம் உட்கட்டமைப்பு இடைவெளி நிரப்பும் நிதி திட்டம் 2014–15 நிதியாண்டில் ரூ.200.00 லட்சம் மதிப்பீட்டில் கட்ட நிர்வாக அனுமதி வழங்கப்பட்ட ஆணை நகலினையும் இணைத்து சமா்ப்பித்துள்ளாா்.

20.10.2017 நாளிட்ட திருக்கோவிலூா் பேரூராட்சிசெயல் அலுவலரின் கடிதத்தில் முறையீட்டு மனுதாரா் திரு,H. ராஜேஷ் அவா்கள் கொடுத்துள்ள முறையீட்டு மனு குறித்தான கூடுதல் அறிக்கையினை கீழ்க்கண்டவாறு சமா்ப்பித்துள்ளாா்.

விழுப்புரம் மாவட்டம், திருக்கோவிலூா் பேரூராட்சி எல்லைக்குட்பட்ட ஒரு பகுதி தென்பெண்ணை ஆறும், மறு பகுதியில் பெரிய ஏரி, சித்தேரி ஆகிய இரண்டிற்குமிடையே அமையப்பெற்ற நகரம் எனவும், இந்நகரம் வணிக வளா்ச்சியில் பின்தங்கிய நிலையில் உள்ளதாகவும் இந்நகரில் புதியதாக கட்டிட உரிமம் வழங்கப்படும் இடங்களுக்கு விதிமுறைகளுக்குட்பட்டே உரிமம் வழங்கப்படுவதாகவும் தெரிவித்துள்ளாா். மேலும் தற்போது புதியதாக எந்த ஒரு திருமண மண்டபத்திற்கும் கட்டிட உரிமம் வழங்கப்படவில்லை எனவும் பேரூராட்சியால் கட்டிட உரிமம் வழங்கப்பட்ட இனங்களில் விதிமுறைகளை மீறி கட்டப்பட்டுள்ள கட்டிடங்கள் கண்டறியப்பட்டு விதிமுறைகளின்படி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் எனவும் தெரிவித்துள்ளாா்.

மேலும் நகரில் உள்ள வணிக பயன்பாடு கட்டிடங்கள் அனைத்தும் காவல்துறை, தீயணைப்புத்துறை, ஆகிய துறைகள் பொதுமக்களின் பாதுகாப்பு வசதிகள் போதிய அளவில் உள்ளதா என்பது கண்டறியப்பட்டு ஆய்வு செய்வதாகவும், கட்டிட உரிமம் வழங்கப்பட்ட அளவினைவிட அதிக அளவில் கட்டப்படடுள்ள கட்டிடங்கள், விதி மீறல்கள் கண்டறியப்பட்டு நடவடிக்கை மேற்கொள்ளப்படும் எனவும் பேரூராட்சி செயல் அலுவலா் தெரிவித்துள்ளாா்.

மேலும் புதிய பேருந்து நிலையம் விஸ்தரிப்பு சம்பந்தமாக முறையீட்டு மனுதாரரால் மாண்பமை சென்னை உயா்நீதி மன்றத்தில் தொடரப்பட்ட வழக்கு எண்.W.P.16110/2017 மற்றும் W.P.No. 24671/2017 ஆகிய இரு வழக்குகள் குறித்தும் மாவட்ட ஆட்சித் தலைவரால் நீதிமன்றத் தீா்ப்புகளின்படி எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் குறித்து செயல் அலுவலா் தெரிவித்துள்ளாா்.

இம்முறைமன்ற நடுவ 10.11.2017 நாளிட்ட அறிவிப்பாணையில் மேற்படி பேரூராட்சியில் புதிய பேருந்து நிலையம் அமைத்தல் தொடா்பாக தொடரப்பட்டுள்ள வழக்குகள் மற்றும்

அவற்றின் விவரங்கள் குறித்தான அறிக்கையினை சமர்ப்பிக்கத் தெரிவித்து திருக்கோவிலூர் பேரூராட்சி செயல் அலுவலருக்கு ஆணையிடப்பட்டது.

10.01.2018 நாளிட்ட திருக்கோவிலூர் பேரூராட்சி செயல் அலுவலரின் அறிக்கையில் 2014–15 நிதியாண்டில் உட்கட்டமைப்பு இடைவெளி நிரப்பும் திட்டத்தின் கீழ் ரூ.200.00 லட்சம் மதிப்பிட்டில் திருக்கோவிலூர் பேருந்து நிலையம் விஸ்தரிப்பு செய்யப்பட்டதில் முறைகேடு நடைபெற்றதாக தெரிவித்து திரு. H.ராஜேஷ், என்பவரால் சென்னை உயர்நீதி மன்றத்தில் தொடரப்பட்ட வழக்கு எண். W.P.No. 16110/2017ல், 27.06.2017 அன்று ஆணை பிறப்பிக்கப்பட்டதெனவும், அதில் விழுப்புரம் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களால் விசாரணை மேற்கொண்டு சம்பந்தப்பட்ட நபருக்கு உரிய விளக்கம் தெரிவிக்க ஆணையிடப்பட்டதாகவும், இது தொடர்பாக விழுப்புரம் மாவட்ட ஆட்சித் தலைவரால் விசாரணை மேற்கொள்ளப்பட்டு அதற்கான விவரம் 11.08.2017 நாளிட்ட அறிக்கை மூலம் மனுதாரருக்கு தெரிவிக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேற்படி விழுப்புரம் மாவட்ட ஆட்சியரால் அளிக்கப்பட்ட விவரம் போதுமானதாக இல்லை என சம்பந்தப்பட்ட நபர் சென்னை உயர் நீதி மன்றத்தில் வழக்கு எண். W.P.No.24671/2017ல் தொடர்ந்துள்ளதாகவும், 9.11.2017 நாளிட்ட விசாரணையின்போது சென்னை உயர் நீதி மன்றத்தில் வழக்கு நிலுவையில் உள்ளதென தெரிவிக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேற்படி வழக்கு எண்.W.P.No.24671/2017ல் 30.11.2017 அன்று தீர்ப்பளிக்கப்பட்டு மேற்படி தீர்ப்பில் பேருந்து நிலையத்தில் பயணிகள் அமர்வதற்கு உரிய இடவசதி ஏற்படுத்திட சாத்தியக்கூறுகள் பரிசீலிக்கப்பட வேண்டும் என ஆணையிடப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேற்படி பேருந்து நிலையத்தில் பயணிகள் நிழற்குடை அமைக்க விழுப்புரம் பாராளுமன்ற தொகுதி மேம்பாட்டு நிதியில் இருந்து 2016–17 நிதியாண்டில் ரூ30.00 லட்சம் ஒதுக்கீடு அளித்து விழுப்புரம் மாவட்ட ஆட்சித் தலைவரின் ஆணை எண்.B.6/2828/16/(RA)நாள்.22.06.2017ல் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேற்படி நிர்வாக அனுமதியின் அடிப்படையில், மேற்படி பணிக்கான ஒப்பந்தப்புள்ளி விளம்பரம் பேரூராட்சியால் 10.07.2017ல் கோரப்பட்டு, திருக்கோவிலூர் பேரூராட்சி செயல் அலுவலரின் ந.க.எண்.அ1/625/2016/நாள்.31.07.2017ன்படி பணி ஆணை வழங்கப்பட்டுள்ளதாகவும், மேற்படி பணி விரைவில் முடிக்கப்பட்டு பொதுமக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வரப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேற்படி தீர்ப்பின் நகலினையும் இணைத்து திருக்கோவிலூர் பேரூராட்சி செயல் அலுவலர் சமர்ப்பித்துள்ளார். மேலும் மேற்படி பணி துவங்கப்பட்டு நடந்து முடிந்து பணிக்கான முதல் பகுதிப் பட்டியலுக்கான தொகை ரூ.10,90,336/– 22.05.2018ல் வழங்கப்பட்டுள்ளதாகவும் பேரூராட்சி செயல் அலுவலரால் 05.06.2018 நாளிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனைத் தொடர்ந்து இப்பொருள் தொடர்பாக, முறையீட்டு மனுதாரரின் 12.09.2016 நாளிட்ட முறையீட்டு மனுவில் குறிப்பிட்டுள்ள புகார்கள் தொடர்பாக முறையீட்டு மனுதாரரால் வேறு ஏதேனும் வழக்குகள் தொடரப்பட்டு நீதிமன்றத்தில் நிலுவையாக உள்ளதா என்ற விவரங்களை தெரிவிக்க இம்முறைமன்ற நடுவ 27.07.2018 நாளிட்ட அறிவிப்பாணை மூலம் முறையீட்டு மனுதாரருக்கும், திருக்கோவிலூர் பேரூராட்சி செயல் அலுவலருக்கும் ஆணையிடப்பட்டது.

திருக்கோவிலூர் பேரூராட்சி செயல் அலுவலர் தனது 07.08.2018 நாளிட்ட கடிதத்தில் திருக்கோவிலூர் பேரூராட்சி பேருந்து நிலையம் விஸ்தரிப்பு தொடர்பாக முறையீட்டு

மனுதாரரால் தொடரப்பட்ட வழக்குகள் ஏதும் தற்போது நிலுவையில் இல்லை எனத் தெரிவித்துள்ளார். ஆனால் முறையீட்டு மனுதாரர் இம்முறைமன்ற நடுவ 24.08.2018 நாளிட்ட அறிவிப்பாணைக்கு பின்னரும் எந்தவிதமான தகவலும் அளிக்கவில்லை.

இம்முறைமன்ற நடுவ 24.08.2018 நாளிட்ட அறிவிப்பாணையில் மேற்படி திருக்கோவிலூர் பேரூராட்சி பேருந்து நிலைய பணியின் தற்போதைய நிலையினை தெரிவிக்க திருக்கோவிலூர் பேரூராட்சி செயல் அலுவலருக்கு ஆணையிடப்பட்டது.

மேற்படி அறிக்கை கிடைக்கப்பெறாத நிலையில், இப்பொருள் தொடர்பாக இம்முறைமன்ற நடுவத்தில் உரிய அறிக்கைகளுடன் ஆஜராகத் தெரிவித்து திருக்கோவிலூர் பேரூராட்சி செயல் அலுவலருக்கு இம்முறைமன்ற நடுவ 28.09.2018 நாளிட்ட அழைப்பாணை மூலம் ஆணையிடப்பட்டது.

திருக்கோவிலூர் பேரூராட்சி செயல் அலுவலர் இம்முறைமன்ற நடுவத்தில் பிறிதொரு வழக்கிற்காக 08.11.2018ல் ஆஜரான நிலையில் இப்பொருள் தொடர்பாகவும் தனது வாக்குமூலத்தினை கீழ்க்கண்டவாறு சமர்ப்பித்துள்ளார்.

முறையீட்டு மனுதாரரின் முறையீட்டு மனு தொடர்பாக திருக்கோவிலூர் பேரூராட்சி செயல் அலுவலரால் 05.01.2017, 06.03.2017, 15.09.2017 மற்றும் 23.10.2017 ஆகிய தேதிகளில் அறிக்கைகள் சமர்ப்பிக்கப்பட்டதாகவும், முறையீட்டு மனுதாரரால் மாண்பமை சென்னை உயர் நீதி மன்றத்தில் நீதிப்பேராணை எண்.16110/2017ல் தொடுக்கப்பட்ட வழக்கு சென்னை உயர் நீதிமன்றத்தால் 27.06.2017 நாளிட்ட தீர்ப்பில், மூன்றாவது எதிர் மனுதாரரான மாவட்ட ஆட்சித் தலைவர், மனுதாரரின் 19.06.2016 நாளிட்ட மனுவிற்கு நான்கு வாரத்தில் உரிய ஆணையிடுமாறு தீர்ப்பளிக்கப்பட்டதின் அடிப்படையில், மாவட்ட ஆட்சித் தலைவர், விழுப்புரம் அவர்களால் 11.08.2017ல் முறையீட்டு மனுதாரருக்கு இது குறித்து ஒரு பதில் அனுப்பப்பட்டதாகவும், அதனைத் தொடர்ந்து முறையீட்டு மனுதாரரால் மாண்பமை சென்னை உயர் நீதிமன்றத்தில் தொடரப்பட்ட நீதிப்பேராணை எண். 24671/2017 வழக்கும் 30.01.2017ல் தள்ளுபடி செய்யப்பட்டு, பேருந்து நிலையத்தில் பயணிகள் அமர்வதற்கு காத்திருப்பு அறை அமைத்திட இடவசதி ஒதுக்கீடு செய்வதற்கான சாத்தியக்கூறுகள் குறித்து பரிசீலிக்கப்படவேண்டுமென ஆணையிடப்பட்டதாகவும், தற்போது மேற்படி பயணிகள் காத்திருப்பு அறை பணிகள் எல்லாம் முடிந்து இறுதி நிலையில் உள்ளதாகவும், 15 தினங்களுக்குள் மேற்படி பணி முழுமையாக முடிக்கப்பட்டு பொதுப்பயன்பாட்டிற்கு கொண்டு வரப்படும் எனவும் தெரிவித்துள்ளார். மேலும் பேருந்து நிலையம் 2017 ஆம் ஆண்டிலேயே பொதுமக்களின் பயன்பாட்டிற்கு கொண்டு வரப்பட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

இந்நேர்வில் விழுப்புரம் மாவட்டம், திருக்கோவிலூர் பேரூராட்சி பேருந்து நிலையம் சம்பந்தமாக முறையீட்டு மனுதாரரின் விளக்கம் பெற இம்முறைமன்ற நடுவத்தில் ஆஜராக இரண்டு முறை அழைப்பாணை அனுப்பியும் முறையிட்டு மனுதாரர் ஆஜராகவில்லை. முறையீட்டு மனுதாரரால் மேற்படி பேருந்து நிலையம் தொடர்பாக மாண்பமை சென்னை உயர் நீதி மன்றத்தில் தொடரப்பட்ட இரண்டு வழக்கும் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளன. வழக்கு எண் W.P.No.24671/17ல் கீழ்கண்டவாறு மாண்பமை நீதிமன்றத்தால் ஆணையிடப்பட்டுள்ளது.

"....When once construction is made after having found that the old bus stand is no longer convenient to operate for the aforesaid purpose, no interference is required at the hands of this court. This court does not find any serious violation warranting interference. Now, new bus stand is functioning catering to the needs of general public. Thus, we do not find any violation in the order under challenge and the writ petition is liable to be dismissed.

Accordingly the writ petition is dismissed. However, considering the submission made by the petitioner, respondent No.3/District Collector, Villuppuram is directed to consider feasibility of allotting space to be used as waiting hall for passengers...."

மேற்கண்டவாறு மாண்பமை சென்னை உயர்நீதி மன்ற ஆணைகளின்படி உரிய தீர்வு அளிக்கப்பட்டுள்ளதை கருத்தில் கொண்டும், முறையீட்டு மனுதாரர் இம்முறைமன்ற நடுவ விசாரணைக்கு ஆஜராகாத நிலையில் அவர் தரப்பில் கூறிக்கொள்ள முகாந்திரம் ஏதுமில்லை எனக் கருதியும் அறிக்கைகள், ஆவணங்கள் மற்றும் வாக்குமூலங்கள் பரிசீலிக்கப்பட்டதன் அடிப்படையில், ஏற்கனவே மாண்பமை சென்னை உயர் நீதிமன்றத்தால் உரிய ஆணைகள் இடப்பட்டுவிட்ட நிலையில் இம்முறைமன்ற நடுவத்தால் புதிதாக எவ்வித ஆணையும் பிறப்பிக்கப்படுவதற்கில்லை என முடிவு செய்து அவ்வாறே ஆணையிடப்படுகிறது.

2018ம் ஆண்டு நவம்பர் திங்கள் 10-ஆம் நாள் கையொப்பமிட்டு அலுவலக முத்திரையிட்டு இவ்வாணையிடப்படுகிறது.

–//ஒப்பம்//–

**தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.**

–//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//–

செயலாளருக்காக

பெறுநர்

1.திரு H. ராஜேஷ், B.A.B.L,
வழக்கறிஞர்,
எண்.110/101, 2–ம் தளம், அறை எண்.4
மேல வீதி,
திருக்கோவிலூர்,
விழுப்புரம் மாவட்டம்.

2.செயல் அலுவலர்,
திருக்கோவிலூர் பேரூராட்சி,
விழுப்புரம் மாவட்டம்,

3.பேரூராட்சிகளின் உதவி இயக்குநர்,
பேரூராட்சிகளின் உதவி இயக்குநர் அலுவலகம்,
கடற்கரை சாலை, கடலூர்.